**தலைப்பு 438 - கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஜுன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மேலும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆம் திகதிய் 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.2 பந்தி பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களிற்காக அறிக்கையிடும் நிறுவனங்களினால் சேர்க்கப்படும் வருமானத்தை நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கக் கூடாததுடன் அவ் வருமானத்தை கட்டுநிதி இணக்கக் கூற்றினுள் செம்மையாக்க வேண்டும். அவ்வாராயினும் ஏனைய பேரேட்டு கணக்கு பெறுவனவு மற்றும் கொடுப்பனவிற்கிடையிலான வித்தியாசமான ரூபா 4,165,213 ஆன வருமானம் கட்டுநிதி இணக்கக் கூற்றினுள் உள்ளடக்காது நிதி செயலாற்றல் கூற்றினுள் உள்ளக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதி செயலாற்றல் கூற்றில் திசெம்பர் 31 திகதியன்று மீதி அதன் சம அளவால் வித்தியாசமாகி இருந்தது. | ஆலோசனை பிரகாரம் சரியாகதயாரிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்று மற்றும் கட்டுநிதி செம்மையாக்கல் கூற்று 2022. 04. 08 ஆம் திகதிய பதில் கடிதத்துடன் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்கு வழிகாட்டிக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் மூலதன கெள்வனவு ரூபா 4,920,497 ஆக காட்டப்பட வேண்டிய போதும் ரூபா 9,838,866 ஆக ரூபா 4,918,369 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | மூலதன சொத்தக்கள் மேன்படுத்துவதன் மூலம் பயனுள்ள ஆய்வு காலம் அதிபரிப்பதால் மூலதன சொத்தக்கள் மேன்படுத்தும் செலவினமாக ரூபா 4,506,524 வும், ஆளணி பயிற்ச்சியினூடாக எதிர்கால நலங்கள் கிடைக்கப் பெறுவதால் ரூபா 411,844 ஆன செலவினமும் மூலதன செலவினமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டள்ளது. | முதலீட்டு செயற்பாடுகளை சரியாக இனங்கண்டு கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 ஆன மொத்த ஏற்பாடும் நி.பி.66 ஊடாக ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த மேம்படுத்தல் மேற்கொள்ளப்படாததன் காரணமாக மொத்த ஏற்பாடுகளும் தேவையான செலவின விடயங்களிற்காக மாற்றப்பட்டன. | யதார்தமான மதிப்பீட்டினை தயாரிக்க பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் செலவின விடயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 200,000 ஆன தொகையிலிருந்து ரூபா 106,044 யினை அதாவது 53 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த மேம்படுத்தல் இடம்பெறாததால் ஏற்பாடு எஞ்சியுள்ளது. | யதார்தமான மதிப்பீட்டினை தயாரிக்க பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சு அலுவலகம் 438-01-01-1301 செலவின விடயத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 3,500,000 யினை மதிப்பிட்டிருந்ததுடன் நி.பி.66 ஊடாக ரூபா 1,600,000 யினை மாற்றப்பட்டிருந்தது. மொத்த ஏற்பாட்டுத் தொகை ரூபா 5,100,000 ஆன போதும் அமைச்சு அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனங்களின் திருத்த செலவினம் ரூபா 7,507,726 ஆனதால் ஏற்பாட்டை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட செலவினம் ஏனைய செலவின விடயங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செலவின விடயம் 438-1-1-1301 இன் கீழ் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு போதாமை மற்றும் அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதனால் 438-1-2-1301 இன் கீழ் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உங்களது ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களை அறிவூட்டபப்பட்டனர். | ஏற்பாட்டினை விஞ்சி ஏனைய செலவின விடயங்களிலிருந்து செலவு மேற்கொள்ள உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழான 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்டிருந்த கடப்பாடுகள் கூற்றில், 94 (2) மற்றும் (3) இன் கீழ் காட்டப்பட வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 318,695 ஆன போதும், அதற்கு மாற்றமாக அதன் கீழ் உள்ளடங்காத பொறுப்புக்களையும் உள்ளடக்கி ரூபா 1,055,294 ஆக குறிப்பட்டிருந்தது. | இறுதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) 2021 ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புகள் ரூபா 3,403,634 ஆக குறிப்பிட்டிருந்ததுடன் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்ட கடன்பாடுகளுக்கு மாத்திரம் iv இலக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பொறுப்புக்களை சரியாக முன்வைக்க செயற்பட வெண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் மூலம் நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகாரசபை மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்துடன் அவ் உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆண்டு சம்பளமாக ரூபா 21,885,087 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் குறித்த உத்தியோகத்தர்களின் செயலாற்றல் தொடர்பான உரிய மேற்பார்வை மற்றும் மதிப்பீடொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக SMCMC/03/36 மற்றும் 2022.05.04 திகதிய கடிதம் மூலம் குறித்த உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். | குறித்த உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை தொடர்பாக உரிய மேற்பார்வை மற்றும் மதிப்பீடொன்று மேற்கொள்ள வேண்டும். |

**4 மனித வள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இராஜாங்க அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 120 ஆனதடன் உள்ளவாரான எண்ணிக்கை 79 ஆனதில் 41 வெற்றிடங்கள் காணப்பட்டன. சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையான 16 இல் 4 அதாவது 25 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன், இரண்டாம் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளிலிருந்து 40 சதவீதமுமே வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடமான பதவிகளுக்காக இந்த அமைச்சிக்கு தேவையான உத்தியோகத்தர்களை பெற்று தருமாறு அரச சேவை, மாகாண சபை மற்றும் உளூராட்சி அமைச்சிடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. | கடமை தேவைப்பாட்டை கவனத்திற்கொண்டு தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |